**<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>**

<u>OS.No. 68 / 2022</u>

**வா.சா.1. மும்தாஜ் பேகம்** **04.01.2024**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சேக் முகமது ராவுத்தர் மனைவி காதர் மீராம்பியம்மாள் என்றால் சரிதான். காதர் மீராம்பியம்மாள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது ஆண் மக்கள் மட்டும் அனுபவிக்கும் வகையில் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. காதர் மீராம்பியம்மாள் 1990-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்தபின்பு உயில் சாசனத்தின் படி மேற்படி உயிலில் "அ அட்டவணை" சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் தெரியாது. சேக் முகமது ராவுத்தர் அவர்களும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் மற்றும் எனது சித்தப்பா குடும்பாரும் சேர்ந்து 1993-ல் பாக பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பாகப்பத்திரத்தை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் அதனால் தான் திருமணத்திற்கு முன்பும் மற்றும் திருமணத்திற்கு பின்னிட்டும் பாக பத்திர சொத்துக்களை குறித்து எந்த கேள்வியும் நான் கேட்கவில்லை என்று சொன்னால் தவறு. எனது பெரிய சகோதரரிடம் கேட்டேன். எனது பெரிய சகோதரரிடம் பாக பிரிவினை சம்மந்தமாக எப்போது கேட்டேன் என்றால் எனது அம்மா உடல் நிலைய சரியில்லாத போது கேட்டேன். அவ்வாறு கேட்டு சுமார் 12 ஆண்டுகள் இருக்கும். அதுபோன்ற விபரம் 12 ஆண்டுகளுக்கு முன்பு தெரியவந்ததா என்றால் எனது அக்காவிற்கு சொத்து விற்க வந்தபோது தான் தெரியும். அவ்வாறு எனது அக்காவிற்கு எப்போது கிரையம் செய்யதார்கள் என்றால் ஞாபகமில்லை. எனது அக்கா பெயர் பாத்திமாபேகம். அவர் தான் இவ்வழக்கின் 1-ம் வாதி என்றால் சரிதான். அவருக்கும் சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பாத்திமா பேகம் கிரையம் பெற்ற சொத்து 1 பாகம் ஜவ்வாது பட்டி சொத்தா அல்லது ஒட்டன்சத்திரம் சொத்தா என்றால் ஜவ்வாது பட்டி புதுார் காதர் மீராம்பீர் தோட்டம். பாத்திமா பேகமான 1-ம் வாதிக்கு கிரையம் செய்த சொத்தையும் அந்த கிரையம் செய்த விபரங்களையும் மேற்படி 1993-ம் தேதிய பாக பத்திரத்தை செல்லாது என்று அறிவிக்க கோரி நான் தாக்கல் செய்த பிராதில் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 05.07.1993-ம் தேதியில் இருந்து தாவா 1-ம் இலக்க சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு அவரது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. வழக்குரை 1ம் இலக்க சொத்து எந்த ஆவணத்தின் மூலம் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரிந்து கொண்டு தான் அந்த உண்மை நிலவரத்தை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால்

தவறு. அந்த விபரம் எனக்கு தெரியாது. எனது சகோதரர்கள் சொத்து பிரிக்கும் போது பழனிக்குமார் பிள்ளை என்பவரை பைசல்காரராக வைத்து பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஐவ்வாதுபட்டியில் உள்ள சொத்தை 3 சகோதரர்களும் 3 பாகங்களாக அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் 1993-ல் கிடைக்கப்பெற்ற பாக பிரிவினை சொத்தை 20.10.2015-ல் அவர்களுக்கிடையில் ஐவ்வாதுபட்டி சொத்தை மட்டும் பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது திருமணத்தின் போது நல்ல முறையில் சீர்வரிசை செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த சீர்வரிசை எல்லாம் எனது அப்பா சம்பாத்தித்து வைத்ததில் எனது சகோதரர்கள் செய்து வைத்தார்கள். வழக்குரை 2-ம் இலக்க சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் 1/4 தனியாக கிரையம் பெற்றார்கள் என்றும் அதை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த பணம் எனது தகப்பனார் கொடுத்தது. நான் சொல்வது பொய் என்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனக்கு பாக உரிமை உள்ளதாக குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நாங்கள் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிகள் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வந்ததாக சொல்வதும் தவறு என்று சொன்னால் சரியல்ல. இஸ்லாமியர்களுக்குண்டான 2 பிரிவுகளில் எந்த பிரிவுகளின் கீழ் நாங்கள் வருகிறோம் என்றும் எதன் அடிப்படையில் என்ன விகிதாச்சாரத்தின் அடிப்படையில் நான் பாகம் கோரியுள்ளேன் என்றால் சன்னி பிரிவின் படி தான் நான் பாக பிரிவினை கோரியுள்ளேன். இந்த விபரங்களை எனது வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றும் அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொன்னால் தவறு.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2024.01.04 16:40:29 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்